


மௌலானா அப்துல் வாஹித் காஷ்மீரியின் அடிப்படை நோக்கம் காஷ்மீராக இருந்தாலும், அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட லஷ்கர் இ தொய்பா என்கிற இயக்கத்தின் நோக்கமாக காஷ்மீரை மட்டும் முன்னிறுத்தவில்லை. காஷ்மீர் ஒரு பகுதி. சொல்லப்போனால் பெரும்பகுதி. ஆனால், ஒரு அஜெண்டா என்று வரையறுக்கும்போது, கொஞ்சம் பெரிய கான்வாஸில் வேலை செய்வதாகக் காட்டுவதுதான் கம்பீரமாக இருக்கும் அல்லவா?

ஆகவே, தெற்காசியாவில் - ரஷ்யா, சைனா போன்ற கம்யூனிச, பழைய கம்யூனிச தேசங்கள் உள்பட இஸ்லாத்தின் செல்வாக்கை அதிகப்படுத்தி, முழுமையாக ஆளச்செய்யும் அளவுக்கு முஸ்லிம்களின் கரங்களை வலுப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய அத்தனை உதவிகளையும் செய்வதே லஷ்கரின் அடிப்படை நோக்கம். அடிப்படைவாதம் என்று நீங்கள் சொல்கிறீர்களா? சொல்லிக்கொள்ளுங்கள். அடாவடித்தனம் என்கிறீர்களா? அது உங்கள் பார்வை, உங்கள் இஷ்டம். எங்கள் வழி இதுதான். எங்கும் இஸ்லாம், எதிலும் இஸ்லாம். உலகை ஆளும் தகுதி இந்த ஒரு மதத்துக்குத்தான் இருக்கிறது. ஆகவே இஸ்லாத்துக்கு, முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறை எங்கெல்லாம் தலையெடுக்கிறதோ, அங்கெல்லாம் ஆயுதத்துடன் லஷ்கர் செல்லும். அதிகார வர்க்கத்தை அசைத்துப் பார்க்கும். அசையவில்லையா? பெயர்த்து எடுக்கும். பெயரவில்லையா? பிளந்து போடுவோம்.

லஷ்கரின் கொள்கைப் பிரகடனத்தைச் சுருக்கிப் பார்த்தால், இப்படித்தான் தெரியும். லாகூரில் இருந்தவரை, இப்படியொரு பிரகடனம் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. முஸஃபராபாத்துக்கு வந்த பிறகுதான் ஏதோ ஒரு நல்ல நாள் பார்த்து உட்கார்ந்து எழுதி, பிரசுரித்திருக்கிறார்கள்.

லஷ்கரின் கொள்கையை, வழிமுறைகளை வகுத்தவர் மௌலானா அப்துல் வாஹித் காஷ்மீரிதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது முஸஃபராபாத்துக்கு வந்த பிறகு, ஆப்கனிஸ்தானிலிருந்து வந்து இணைந்துகொண்ட சில முன்னாள் ஆப்கன் ஜிஹாதிகளின் பங்கும், இதில் இருந்திருக்கக் கூடும் என்கிற சந்தேகம் இருக்கிறது.

பெரும்பாலும் பாகிஸ்தானியர். ஓரளவு ஆப்கனிஸ்தான் இளைஞர்கள். மிகச் சில காஷ்மீரி இளைஞர்களும் உண்டு. இவர்களுக்கெல்லாம் அடிப்படைப் போர்ப்பயிற்சிகளை அளித்துவிட்டு கொஞ்சகாலம் ஆப்கனிஸ்தானுக்கே 'மேல் படிப்புக்கு' அனுப்பி வைத்தார் மௌலானா.

தாலிபன்களின் ஆப்கன். அன்றைய தேதியில் தாலிபன்களைத் தவிர, வேறு யாரும் உலகில் அத்தனை உக்கிரமாக அடிப்படைவாதம் பழகியவர்களாக இல்லை. தாடியிலிருந்து பீடி வரை அனைத்துமே மதத்தின் முத்திரை தாங்கிய அரசின் உத்தரவுகளாகவே வந்து கொண்டிருந்தது. மக்களின் அடிப்படைப் பேச்சுரிமை, எழுத்துரிமை முதல் வாழ்வுரிமை வரை தாலிபன்களால் மட்டுமே தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலம். அங்கே தனியார் ராணுவம், அரசு ராணுவம்

என்று கட்சிப் பாகுபாடுகளெல்லாம் இல்லை. தாலிபன்களை யார் ஆதரித்தாலும் அவர்கள் தாலிபன்களின் சார்பில் போர் புரியலாம், பாதுகாவல் பணியில் ஈடுபடலாம், ஒசாமா பின்லேடனுக்கு அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வாழ்த்துப் பா பாடலாம்.

லஷ்கர் இளைஞர்களை ஆப்கனுக்கு அனுப்பியபோது, மௌலானாவின் எண்ணம் அதுதான். தாலிபன்களுடன் சிறிது காலம் லஷ்கர் போராளிகள் தங்கி, பணியாற்றி அனுபவம் பெற்றால், கண்டிப்பாக ஒசாமா பின்லேடனின் பழக்கமும் நெருக்கமும் கிடைக்கும். அது இயக்கத்தை வளர்க்க பேருதவி புரியும்.

குறிப்பாக, ஆயுதங்கள் விஷயத்தில் லஷ்கருக்கு எந்தக் காலத்திலும் பிரச்னையே இருக்கக் கூடாது என்று அவர் நினைத்தார். தடையில்லாமல் வேண்டிய ஆயுதங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும். கள்ள மார்க்கெட்டில் வாங்கலாம், சொந்தமாகத் தயாரிக்கலாம், இன்னும் பல வழிகள் இருந்தாலுமே கூட, ஒரு பெரிய இடத்தின் ஆதரவு இருந்துவிடுகிற பட்சத்தில், கவலையின் பெரும்பகுதி எளிதில் தீர்ந்துவிடுகிறது அல்லவா? அதற்காக.

2002-ம் ஆண்டின் மத்தியில் (எந்த மாதம் என்று தெரியவில்லை.) லஷ்கர் இ தொய்பாவைச் சேர்ந்த பெரும்பாலான போராளிகள் ஆப்கனிஸ்தானுக்குச் சென்றார்கள். கந்தஹார், ஜலாலாபாத், காபூல் நகரங்களில் அவர்களுக்கான தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. தாலிபன் ஊர்க்காவல் படையிலும், சிறப்பு ராணுவப் படையிலும், உளவுத் துறையிலும் அவர்கள் பயிற்சியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். லஷ்கர் போராளிகளில் தேர்ந்தெடுத்த மிகச் சிலரை மட்டும் தோராபோரா மலைப்பகுதியில் (அப்போது) வசித்துவந்த ஒசாமா பின்லேடனுடன் தொடர்பு கொள்ளும் வகையில் பணியமர்த்தினார்கள்.

ஆப்கன் முழுவதும் வியாபித்திருந்த அல் காயிதாவின் கிளைகளுக்கிடையே தகவல் தொடர்புப் பரிமாற்றங்களுக்காகவும், ஆப்கனிலிருந்து பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானிலிருந்து ஆப்கனுக்கும் கடிதங்கள், பொருள்கள் கொண்டு போய்ச் சேர்க்கும் கூரியர் பணிகளுக்கும் அந்த இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

அமெரிக்கா, ஆப்கனிஸ்தான் மீது படையெடுத்தபோது, என்ன காரணத்தாலோ லஷ்கரின் போராளிகளை தாலிபன்கள் முஸஃபராபாத்துக்குத் திருப்பியனுப்பி விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் யுத்த முடிவில் அமெரிக்கா தன் டேஞ்சர் நோட்ஸ் புத்தகங்களில் லஷ்கரின் பெயரையும் கொட்டை எழுத்தில் எழுதி வைத்து, பாகிஸ்தானை எச்சரித்தது நினைவிருக்கலாம்.

ஆப்கனிஸ்தான் தொடர்பில்லாமல், தீவிரவாதம் கிடையாது என்கிற சரித்திர உண்மையை நிரூபிப்பதற்காகவாவது கொஞ்ச காலம் லஷ்கர் போராளிகள் ஆப்கனிஸ்தானில் குப்பை அல்லது குண்டு கொட்டிவிட்டு ஊர் திரும்பிய பிறகுதான் மௌலானா, இந்தியா குறித்தும் காஷ்மீர் குறித்தும் அவர்களுக்குச் சிறப்புப் பாடங்களை ஆரம்பித்தார்.

இந்தப் பாடங்களைத் தொடங்குகின்ற நேரத்தில், லஷ்கர் போராளிகளின் எண்ணிக்கையும், அவர்களது போர்ப் பயிற்சி பலமும் கணிசமாக உயர்ந்திருந்தது. ஒரு பெரிய காரியத்துக்காகத் தினவுடன் காத்திருந்தார்கள்.

அதற்கு ஏற்றாற்போல, அவர்களுக்கு ஒரு கமாண்டர் அமைந்தார். ஜக்கி உல் ரெஹ்மான் லக்வி (Zaki ul Rehman Lakwi) என்று பெயர் அவருக்கு. காஷ்மீரை மட்டுமே தன் வாழ்நாள் நோக்கமாகக் கொண்டவர் அவர். சீனியர் முல்லாவுக்குச் சரியான வாரிசு. ஆனால் யுத்த வாரிசு. சித்தாந்தம், தத்துவம், புடலங்காய், புண்ணாக்கையெல்லாம் நினைத்துக் கொண்டிராதவர். அடி அல்லது அழி. அவ்வளவுதான் சித்தாந்தம்.

ஜகி உல் ரெஹ்மான், லஷ்கரின் தொடக்க கால உறுப்பினர்களுள் ஒருவர். மௌலானாவுக்கும் அவருக்கு இயக்கத்தைத் தத்துக் கொடுத்த புரொபசர் ஹபீஸ் முஹம்மது சயீதுக்கும் மிகவும் வேண்டப்பட்டவர். பிறந்தது பாகிஸ்தான் என்றாலும், நீண்ட நெடுங்காலம் ஆப்கனிஸ்தான் காடுகளிலேயே வாழ்ந்து தீர்த்தவர். லொக்கேஷன் போரடித்து முஸஃபராபாத்துக்கு வந்தார் என்றுதான் சொல்லவேண்டும்.

உண்மையில் ஆப்கன் யுத்தம் முடிந்த பிறகு பல போராளிகளுக்கு என்ன செய்வது, எங்கே போவது என்கிற குழப்பம் இருந்திருக்கிறது. ஆயுதம் தாங்கி, ஒரு போராட்டம் நிகழ்த்தி, அதில் வெற்றியும் பெற்ற பிறகு, வீடு திரும்பி டிபன் பாக்ஸில் நாலு இட்லி கட்டி எடுத்துக்கொண்டு, ஆபீஸ் போக அவர்கள் விரும்பவில்லை; அல்லது உத்தியோகம் அப்படி வாய்க்கவில்லை.

அது ஒரு பக்கம் இருக்க, கமாண்டர் இன் சீஃபான ஜகி உல் ரெஹ்மான், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட லஷ்கர் போராளிகளைச் செதுக்கிச் சீர் செய்யும் பணியை, காஷ்மீரின் எல்லையில் வைத்தே தினசரி செய்யத் தொடங்கினார். 'அதோ பார் காஷ்மீர்! அதுதான் இலக்கு. அங்கேதான் போகவேண்டும், அதைத்தான் அடையவேண்டும்' என்று மந்திரவாதி உருவேற்றுவது போல தினசரி காலை, மாலை பிரார்த்தனைக்குப் பிறகு, அதையே திரும்பத் திரும்பச் சொல்லி, பிரார்த்தனையையும் காஷ்மீரின் பொருட்டே அமைத்துக் கொண்டதன் பலன், லஷ்கர் போராளிகள், எப்போது காஷ்மீருக்குள் நுழையலாம் என்று ஏங்கத் தொடங்கி விட்டார்கள்.

ஜகி தவிர, இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த அப்துல்லா, பூஞ்ச் பகுதியைச் சேர்ந்த ஹாஜி முஹம்மது அசம், தோடா பகுதியைச் சார்ந்த முஸம்மில் பட், பாரமுல்லாவைச் சேர்ந்த முஹம்மது உமர், பாக் பகுதிக்காரரான சவுத்ரி அப்துல்லா காலீத், முஸஃபராபாத்தையே பூர்வீகமாகக் கொண்ட ரஃபீக் அக்தர், அஃப்தாப் ஹுசைன், மிர்பூரைச் சேர்ந்த சவுத்ரி யூசூஃப் என்று இன்னும் பலபேரும் இந்த இளம் லஷ்கர் போராளிகளுக்குப் போர் மற்றும் மனப் பயிற்சிகளை அளித்த மூத்தவர்களுள் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவரும் வெவ்வேறு காலகட்டங்களில் லஷ்கரின் பொதுக்குழுவில் உறுப்பினர்களாக இருந்தவர்கள், இருப்பவர்கள்.

இந்தப் பட்டியலில் இடம் பெறாத, ஆனால் லஷ்கரின் ஏதோ ஒரு மிக முக்கியப் பொறுப்பில் உள்ள (அநேகமாக ஆபரேஷன்ஸ் சீஃப்) சைஃபுல்லா என்பவரும், லஷ்கரின் பாதையை வகுத்தவர்களுள் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகிறார்.

என்ன பிரச்னை என்றால், ஒசாமா பின்லேடன் மாதிரியோ, பாலஸ்தீன், லெபனான் போராளிகள், ஜமா இஸ்லாமியாவின் ஹம்பாலி மாதிரியோ இவர்களெல்லாம் போட்டோ எடுத்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு வசதி பண்ணிக் கொடுத்ததில்லை. துணிந்து முஸஃபராபாத்துக்குள் நுழைந்து லஷ்கர் ஆசாமிகளைப் பார்த்துப் பேசி எழுதிய பத்திரிகையாளர்கள் என்றும் யாரும் கிடையாது. எழுதப்பட்டிருப்பவை அனைத்தும் கேள்விப்பட்டவை, அல்லது சொல்லப்பட்டவை.

ஆதாரபூர்வமான உண்மைகளை இரு தேசங்களின் உளவுத்துறையின் மூலம் பெறமுடியும். ஆனால், போட்டோ கிடைக்காத காரணத்தால் இவர்கள் 'வேண்டிய அளவுக்குப்' பிரபலமாகாமல் போய்விட்டார்கள்!

என்ன கெட்டுவிட்டது? லஷ்கர் போராளிகள் பிரபலத்துக்கு ஆசைப்படாதவர்கள் என்று வைத்துக் கொள்வோம்!

ஆனால், அவர்களது திருவிளையாடல்கள் ஒவ்வொன்றும் தேசிய அளவில், சர்வதேச அளவில் பிரபலமடைந்திருக்கிறதே, போதாதா? பின்னால் வரிசையாகப் பார்க்கலாம். இப்போது முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுண்டு.

ஒரு மாநில அரசு, மாவட்ட வாரியாகக் காரியங்கள் சரியாக நடைபெறுவதற்காக ஒவ்வொரு

ஆட்சியாளரை நியமித்து எப்படி அவர்களுக்குக் கீழே பல அதிகாரிகளை வரிசைப்படுத்தி வைக்கிறதோ, அந்த மாதிரி காஷ்மீரின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் லஷ்கர் தனியொரு ‘ஆட்சியாளரை’ நியமித்திருக்கிறது. அவருக்குக் கீழே பல லெவல்களில் கமாண்டர்கள், சிப்பாய்கள் உண்டு.

இவர்கள் என்ன செய்கிறார்கள்?

அதுதான் விஷயம். அதுதான் விசேஷம். காஷ்மீர் விஷயத்தில் லஷ்கரின் செயல்பாடுகள் எதுவும் முன் யோசனை இல்லாமல் செய்யப்படுவதில்லை. மிகவும் தெளிவாகத் திட்டமிட்டு, துல்லியமாகத் தகவல் சேகரித்து, எதிரியின் பலம் உணர்ந்து காரியம் செய்யவேண்டுமென்பது அவர்கள் குறிக்கோள்.

அதனால், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணியில் அமர்த்தப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் தினசரி நடப்புகள் உள்பட ஒரு தகவலையும் விடாமல் மேலிடத்துக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்கிறார்கள். தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இண்டர்நெட், சாட்டிலைட் போன், மொபைல் போன் என்று வசதிகளுக்கா பஞ்சம்? புறாவின் காலில் லிகிதம் கட்டி அனுப்பும் உத்தியில் ஆரம்பித்து, அத்தனை சாத்தியங்களையும் லஷ்கர் திறமையாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

இதுதான் முக்கியம். இதுதான் அதிமுக்கியம். இந்தக் காரியத்துக்கு லஷ்கருக்கு இரண்டு தரப்புகள் உதவி செய்கின்றன. ஒன்று, ப்ராப்பர் காஷ்மீரத்து மக்கள். லஷ்கர் ஆதரவாளர்கள். அல்லது பாகிஸ்தான் ஆதரவாளர்கள். இரண்டாவது தரப்பினர் ஐ.எஸ்.ஐ.யின் காஷ்மீர் பிரிவு அதிகாரிகள்.

காஷ்மீர் மாநில அரசாங்கம், டெல்லி மத்திய அரசாங்கம் என்ன செய்கிறது, என்ன சொல்கிறது என்பது தொடங்கி, ஏனைய காஷ்மீர் இயக்கங்களின் செயல்பாடுகள் வரை இவர்கள் சேகரிக்கிறார்கள். ஒரு தகவலையும் விடுவதில்லை. யாராவது ஒரு மத்திய அமைச்சர் காஷ்மீருக்குப் போகிறார் என்றால், அந்தச் செய்தி காஷ்மீர் தலைமைச் செயலகத்துக்கு வந்து சேருவதற்கு முன்னால், லஷ்கர் தலைமைச் செயலகத்துக்குத் தெரிந்துவிடும். இந்த வகையில் ஐ.எஸ்.ஐ.யின் உதவி மிக முக்கியமானது.

அதே சமயம், மாநில அரசாங்கத்தின் திட்டங்கள், செயல்பாடுகள், ரகசிய ஏற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்து அறிவதற்கு அவர்கள் உள்ளூர் மக்களையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள். இங்கே கவனத்தில் கொள்ளவேண்டிய மிக முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. இன்றைய தேதியில் காஷ்மீரில் மெஜாரிடிகள் ஹிந்துக்கள் அல்லர் என்பதுதான் அது!

அதனால்தான் லஷ்கர் இ தொய்பா மிகத் தெளிவாக அறிவித்தது. ‘இந்துக்களும் யூதர்களும் இஸ்லாத்தின் எதிரிகள். இந்தியாவும் இஸ்ரேலும் பாகிஸ்தானின் எதிரிகள்.’

இங்கே யூதர்கள் எங்கே வந்தார்கள் என்று கேட்கக்கூடாது. லஷ்கருக்கு இஸ்ரேல் விஷயத்தில் என்ன சிறப்பு அக்கறை என்றும் கேட்கக்கூடாது. ஆனால், லஷ்கரின் கொள்கை விளக்க முழக்கத்தில் இஸ்ரேல் குறித்தோ, யூதர்கள் குறித்தோ, அவர்கள் பாலஸ்தீனத்து அரேபியர்களை ஒடுக்குவது குறித்தோ, சிறப்புக் குறிப்பாக ஏதுமில்லை என்பதையும் இங்கே சொல்லிவிட வேண்டும்.